2018 ஜனவரி 10]

ஆக இருக்கிறது; ஓர் ஏக்கர் இடம் இருக்கிறது. அது, அரசுக்குச் சொந்தமான இடம் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஒருவர் case போட்டதை எப்படி handle செய்வது என்பதைப் பார்த்து, அந்த இடத்தை மீட்டாலே நமக்கு பெரிய அச்சகம் அமைப்பதற்கு இடம் இருக்குமென்று நான் நினைக்கிறேன். அதுமட்டுமல்லாமல், அங்கே சந்தையும் நடத்தலாம். அதில் பிரச்சினை ஒன்றுமில்லை. மக்களுக்குத் தேவையானவற்றை விற்பனை செய்வதையும் அங்கே continue செய்யலாம். ஆகையால், அங்கே புதிய அச்சகம் அமைத்துக் கொடுத்தே ஆகவேண்டும். பழைய அச்சகத்தில் இயந்திரங்கள் துருப்பிடித்திருக்கின்றன. அவற்றையெல்லாம் மாற்ற வேண்டிய கட்டாயம் இருக்கிறது. பணியாளர்களின் சம்பளமும் நிறைய நிலுவையில் இருக்கிறது. அதையும் இந்த அரசு பரிசீலனை செய்து உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அதிக நிதிகள் ஒதுக்கி அச்சகக் கட்டடம் கட்டித் தந்து, புதிய அச்சு இயந்திரங்களைத் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, பொறியாளர்களை வைத்து அந்தக் கட்டடத்தின் உறுதித் தன்மை அறியப்படும். அதேபோன்று உறுப்பினர் சொல்லக்கூடிய, அருகில் இருக்கக்கூடிய இடத்தையும் ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

சைபர் பாதுகாப்பு கொள்கை

***17821—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இணைய வழி ஊடுருவிகளிடமிருந்து இணையதளங்களைக் கண்காணித்துப் பாதுகாக்க cyber பாதுகாப்புக் கொள்கையை உருவாக்க அரசு முன்வருமா?

முற்பகல் 11–15

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற அன்புத் தலைவி, பாசத் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரையும் வணங்குகிறேன்.*

தமிழகத்திற்கான மின்னணு பாதுகாப்புக் கொள்கை (E–Security Policy) *அரசாணை (நிலை) எண் 42, தகவல் தொழில்நுட்பத் துறை, நாள் 24–9–2010 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இக்கொள்கையில் இணைய இணைப்பின்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிலையில் பிறிதொரு கொள்கை வகுக்கத் தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* cyber crimes *அதிகரித்து வருகிற காலம் இது.* Technology *வளர, வளர* internet crimes *அதிகரித்துக்கொண்டே போகின்றன.* Hackers *என்று சொல்லப்படுகிற இணைய வழி ஊடுருவிகள், அதாவது நம்முடைய* computer–*லேயே அந்த* server–*ல் புகுந்து, நாம்* save *செய்து வைத்திருக்கிற அந்த* data–*வையே அழித்துவிடுகிற காரியத்தை எல்லாம் அந்த* hackers *என்ற ஊடுருவிகள் செய்கிறார்கள். அதைவிட கொடுமை, நம்முடைய* Bank Account–*லேயே அவர்கள் நுழைந்து நம்முடைய* PIN Number–*ஐ வைத்து பணத்தைக்கூட எடுக்கிற காரியத்தில் ஈடுபடுகிறார்கள்.*

சமீபத்திலே நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய twitter–*லே புகுந்து யாருக்கோ அவர் வாழ்த்து அனுப்பியதாகச் செய்திகள் எல்லாம் வந்தன. அது அவருடைய* account–*ஏ இல்லை. எனவே, நம்முடைய* account

2018 ஜனவரி 10]

authenticated ஆக இருக்க வேண்டுமென்று சொன்னால், நம்முடைய account, Blue tick வசதியைப் பெற்றாக வேண்டும். அந்த Blue tick வசதி இல்லையென்று சொன்னால், இப்படிப்பட்ட ஊடுருவிகள் தொடர்ந்து அந்தக் குற்றத்தைச் செய்து கொண்டிருப்பார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை சொல்லுகின்றபோது, 7 ஆண்டுகளுக்கு முன்னாலே E–Security Policy ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்று சொல்கிறார்கள். அப்படி 7 ஆண்டுகள் ஆகியும் இன்னமும் அந்தத் தவறுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பல நிறுவனங்கள் இதனாலே பாதிக்கப்படுகின்றன. எனவே, என்னுடைய வேண்டுகோள் நம்முடைய account–லே Blue tick வசதியை அனைவரும் ஏற்படுத்திக் கொள்கின்ற வகையிலே துறை ஒரு awareness–ஐ மக்களுக்கு ஏற்படுத்தி, அந்த Blue tick வசதியை ஏற்படுத்திக் கொடுக்க அந்தத் துறை முயலுமா என அறிய விரும்புகிறேன்.

அதேபோல, என்னதான் E–Security Policy கொண்டு வந்திருந்தாலும், நடைமுறையிலே அது முழுமையாக இன்னும் நமக்குப் பலனைத் தரவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, அதாவது இதை zero நிலைக்குக் கொண்டுவருகிற வகையிலே, இந்தத் தாக்குதலிலிருந்து மக்களைக் காப்பாற்றுகிற அந்தவகையிலே பூஜ்ஜியம் அளவிற்கு அதைக் கொண்டுவருவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா, எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்னணு பாதுகாப்புக்கொள்கையில் இணைய இணைப்பின்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், பாதிப்புகள் மற்றும் ஊடுருவிகளிடமிருந்து அரசு இணையதளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மென்பொருட்களைப் பாதுகாத்திட துறைகளின் தரவுகள் முன்னெச்சரிக்கையாக தணிக்கை செய்யப்பட்ட பின்னரே தரவேற்றம் செய்யப்படுவதால், பாதிப்பிலிருந்து தரவுகள் பாதுகாக்கப்படுகின்றன. தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புத்

தணிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக 1 கோடியே 76 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசுத் துறை சார்ந்த நிறுவனங்களின் இணையதளங்கள் ஆண்டுதோறும் பாதுகாப்புத் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. இதனால் துறைகளின் தரவுகள் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன. தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் இதுநாள் வரை அரசு துறைகளின் 118 மென் பயன்பாடுகள் பதிவேற்றம் செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநில தரவு மையக் கட்டுப்பாடு மற்றும் பயன்பாடுகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும்பொருட்டு, பயன்பாடுகள் அனைத்தும் பாதிப்பிற்கான மதிப்பீடு மற்றும் ஊடுருவல் மதிப்பீடு, that is called Vulnerability Assessment and Penetration test செய்யப்பட்ட பிறகு பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு மாநில தரவு மைய உட்கட்டமைப்பு மற்றும் மென் பயன்பாடுகளை இணைய தாக்குதலில் இருந்து பாதுகாக்கும்பொருட்டு தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் Security Information and Event Management எனப்படும் கட்டமைப்பு நிறுவப்பட்டு, தொடர் கண்காணிப்புடன் இணைய பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

முற்பகல் 11–20

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் cyber பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக 7 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட திட்டம் என்றாலும், அந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுமைக்கான உயர்மட்டக் குழு மற்றும் தொழில்நுட்பக் குழு என இரண்டு குழுக்களை அமைத்து ஆணைகளை வெளியிட்டார்கள். இந்தக் குழுக்கள் cyber பாதுகாப்பிற்குத் தேவையான அறிவுரைகள் மற்றும் ஊடுருவல் தடுப்பு குறித்து அவ்வப்போது அறிவுரைகளை வழங்கும். தமிழ்நாடு தரவு மையத்தில் தரவுகளின் பாதுகாப்பிற்காக firewalls, ஊடுருவல் தடுப்பு அமைப்பு, ஊடுருவல் கண்டறிதல் அமைப்பு, பாதுகாப்பு தகவல் நிகழ்வு மேலாண்மை அமைப்பு போன்ற அமைப்புகள் நிறுவப்பட்டு, 24 மணி நேரமும் தொடர் கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மேம்பட்ட இணைய தடங்கல்களை எதிர்கொள்ளத் தேவையான வலுவான திறன்களை உருவாக்குவதற்கு, தமிழ்நாட்டிற்கான

*இணைய பாதுகாப்புக் கட்டமைப்பு–*Cyber Security Architecture for Tamil Nadu*–திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தமிழ்நாட்டிற்கான மாநில இணைய நெருக்கடி மேலாண்மைத் திட்டம்–*Cyber Crisis Management Plan for Tamil Nadu*–இதை உருவாக்கும் நடவடிக்கையில் அரசுத் துறைகள் தமிழ்நாடு கணினி அவசர மீட்புக் குழு செயல்பாடு மற்றும் தமிழ்நாடு தகவல் பாதுகாப்பு இயக்க மையம் தொடர்பான கொள்கை, செயல்முறை மற்றும் நடைமுறை ஆவணங்களைத் தயாரிப்பது ஆகியவை உள்ளடங்கும். தமிழ்நாடு கணினி அவசர மீட்புக் குழு உருவாக்கம்–*Computer Emergency Response Team (CERT–In), *தமிழ்நாடு தகவல் பாதுகாப்பு இயக்க மையம் நிறுவுதல்–*Tamilnadu Information Security Operating Centre, *தமிழ்நாடு அரசுத் துறைகள் மற்றும் தமிழ்நாடு தரவு மையத்திற்கான பாதுகாப்புக் கட்டமைப்பு அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்கள் மத்தியில் இப்போது* Blue Whale *என்ற ஆபத்தான விளையாட்டு அவர்களின் ஆசையைத் தூண்டிவிட்டு பின்னர் ஆபத்தில் முடிவதாக இருக்கிறது. பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைகளின் எதிர்காலம் குறித்து கவலையோடு இருக்கிறார்கள். எனவே இந்த விளையாட்டைத் தடுப்பதற்கு, அந்த மோகத்தைத் தடுப்பதற்கு,* mobile phone application*–ல் அந்த விளையாட்டைத் தடுப்பதற்கான அல்லது தடை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனவா? அப்படி எடுக்கப்பட்டிருந்தால் அதன் பலன் ஏதாவது நமக்குக் கிடைத்திருக்கிறதா? இந்த ஆபத்து குறித்து இளைஞர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை அதாவது* awareness*-ஐ ஏற்படுத்துவதற்கு துறை இப்போது எத்தகைய நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து நல்ல பதிலை எதிர்பார்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2018 ஜனவரி 10*

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* blue tick *என்பது ஒரு* technology*–தான். (குறுக்கீடுகள்) இல்லை இல்லை, அதுவும்தான். இதற்கு முன்னால்* blue tick *பற்றிக் கேட்ட கேள்விக்கு தற்போது விடையளிக்கிறேன்.* Blue Whale*–க்கும்* blue tick*–க்கும் ஓர் அமைச்சருக்கு வித்தியாசம் தெரியாதா? (குறுக்கீடு)* Blue tick *என்பது ஒரு* technology*–தான். அது ஒன்றும்* safety mechanism *கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருந்ததுபோல்* Blue Whale*–ன் பாதிப்பு அதிகம் ஏற்பட்டிருந்தது. (குறுக்கீடு) இல்லை. அவர்* Blue Whale *பற்றிக் கேட்டிருந்தார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், இங்கே என்னைப் பார்த்துப் பேசுங்கள்.*

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: Blue Whale game*–ன் பாதிப்புகளெல்லாம் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டன. அதனுடைய* server *ரஷ்யாவிலிருந்து இயக்கப்படுகிறது. அந்த* Blue Whale game*–னுடைய* server*–ஐ* block *செய்வதற்கு மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, தமிழகத்திலே நிறைய பாதிப்புகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. மத்திய அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளின் காரணமாக அந்த* server *எல்லாம்* block *செய்யப்பட்டுவிட்டது. தற்பொழுதும் அதுசம்பந்தமான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. எனவே, மேற்கொண்டு எந்தவித பாதிப்பும் அதனால் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]